**பாடம் 2** **ஏப்ரல் 2-8**

# விழுகை



**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 3; 2கொரி 11:3; வெளி 12:7–9; யோவான் 8:44; ரோமர் 16:20; எபி 2:14; 1தீமோ 2:14,15.

**மனன வசனம்:** 'உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்'. ஆதி 3:15.

ஏதேனில் தேவன் நம் முதல் பெற்றோருக்கு அனைத்தையும் கொடுத்துவிட்டு, ஓர் எச்சரிப்பும் கொடுத்தார்: 'நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்' ஆதி 2:16,17. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடாதென்கிற எச்சரிப்பானது, அவர்கள் நன்மையை மட்டுமே அறியவும், தீமையை அறியாதிருக்கவும் தேவன் விரும்பினதைக் காட்டுகிறது.

அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்வது ஒன்றும் கடினமல்ல, இல்லையா?

கீழ்ப்படியாவிட்டால் மரணம் நிச்சயம், அவர்கள் சாகநேரிடும் என்று எச்சரித்தார். ஆதி 2:17; 3:19. மேலும், ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கமுடியாது; அதோடு ஏதேன் தோட்டத்திலிருந்தும் விரட்டப்படுவார்கள். ஆதி 3:24. எனவே பாவம்செய்த பிறகு, நித்தியஜீவன் தரக்கூடிய அந்த விருட்சத்தை அண்டமுடியாது. ஆதி 3:22.

வேதனைமிக்க அந்தச் சூழ்நிலையில்தான் நம்பிக்கை கொடுக்கிறார். ஆதி 3:15. அது முதல் சுவிசேஷ வாக்குறுதி என்று அழைக்கப்படுகிறது. ஆம், முதல் சுவிசேஷ வாக்குறுதி அந்த வசனத்தில்தான் உள்ளது. மனிதர்கள் விழுந்தாலும், அனைவரும் தப்பிப்பதற்கான ஒரு வழியை தாம் உண்டாக்கியுள்ளதை முதன்முதலாக மனிதர்களுக்குச் சொல்கிறார்.

*2021, ஏப்ரல் 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# சர்ப்பம்

**சர்ப்பம் யார்? அவன் எவ்வாறு ஏவாளை ஏமாற்றுகிறான்? ஆதி 3:1; 2கொரி 11:3; வெளி 12:7–9.**

ஆதி 3:1இன் மூலவாக்கிய அமைப்பில் 'சர்ப்பம்' என்கிற வார்த்தை முதலில் வருகிறது. மேலும் அது குறிப்புச் சுட்டுச்சொல்லாக உள்ளது. அதாவது, சொல்லப்படுகிற நபர் ஏற்கனவே தெரிந்த நபராக இருந்தால் குறிப்புச் சுட்டுச் சொல்லைப் பயன்படுத்துவார்கள். எனவே அந்த அதிகாரத்தின் முதல் வசனமே, அந்த நபர் உண்மையில் இருப்பதை வலியுறுத்துகிறது.

சர்ப்பமானது தேவனுடைய எதிரி என்று வேதாகமம் அடையாளம் காட்டுகிறது. ஏசா 27:1. 'பிசாசு' என்றும், 'சாத்தான்' என்றும் அவனை அழைக்கிறது. வெளி 12:9. அதுபோல, பண்டைய கிழக்கத்திய நாடுகளில், தீயவல்லமைக்கு அடையாளமாக சர்ப்பத்தைப் பயன்படுத்தினார்கள்.

'சாத்தான் தன் திட்டத்தை நயவஞ்சமாக நிறைவேற்றுதற்கு, சர்ப்பத்தை ஊடகமாகப் பயன்படுத்தினான்; அவன் வஞ்சக நோக்கத்தை நிறைவேற்ற சர்ப்பம் மிகவும் தோதுவாக இருந்தது. பூமியிலேயே மிகவும் ஞானமான, அழகுமிக்க சந்துக்களில் ஒன்றாக சர்ப்பம் இருந்தது. அதற்கு இறகுகள் இருந்தன; அதன் பொன் நிறமும் பளபளப்பும் ஆகாயத்தில் பறக்கும்போது சுடரொளிபோல மின்னின'.[1]

பிசாசைபல்வேறு வார்த்தைகளில்வேதாகமம் குறிப்பிடுகிறது; ஆனால்அதில் எதுவுமே உருவக வார்த்தையல்ல. சாத்தான் உண்மையில் ஒரு நபரென வேதாகமம் சொல்கிறது; சாத்தானை ஓர் அடையாளச் சொல்லாகவோ, தீமை அல்லது மனிதர்களின் இருண்டபக்கத்தைச் சுட்டிக்காட்டும் நியதியாகவோ பயன்படுத்தவில்லை.

சாத்தான் தன்னை தேவனுடைய எதிரியாகக் காட்டுவதில்லை. மாறாக, தேவனுடையவார்த்தைகளைதானும்பேசுகிறான்;தேவவார்த்தையைஆதரிப்பதுபோலக் காட்டிக்கொள்கிறான். தேவனுடைய வார்த்தைகளை மேற்கோள் காட்ட அவனுக்குப் பிடிக்கும்; அதை மத்தேயு 4:6இல் பார்க்கமுடிகிறது.

சர்ப்பம் எடுத்ததும் ஸ்திரீயிடம் விவாதிக்கவில்லை. ஆண்டவர் அவர்களிடம் சொன்னதை தானும் நம்பினவன்போல ஒரு கேள்வியைக் கேட்கிறான். 'என்று தேவன் சொன்னது உண்டோ?' ஆதி 3:1. எனவே, அவன் எவ்வளவுக்கு வஞ்சகன், தந்திரசாலி என்பது ஆதியிலேயே தெரிகிறது. அவன் கேள்விக்கு பலன் கிடைக்காமல் இல்லை.

[1] Ellen G. White, Patriarchs and Prophets, p. 53.

**ஏதேனில் பாவமில்லாத ஏவாளை சாத்தான் வஞ்சிக்கமுடியுமானால், நம்மை எவ்வளவுதூரம் வஞ்சிக்க முடியும்? அவனுடைய வஞ்சகங்களிலிருந்து தப்பிக்க மிகச்சிறந்த வழி என்ன?**

# விலக்கப்பட்ட கனி

**தேவன் ஆதாமுக்குப் போட்ட கட்டளையையும், சாத்தான் ஸ்திரீயிடம் பேசின வார்த்தைகளையும் ஒப்பிடுங்கள். ஆதி 2:16,17; ஆதி 3:1–6. மேலும் பார்க்க: யோவான் 8:44. இரண்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன? அந்த வித்தியாசம் சுட்டிக் காட்டும் உண்மை என்ன?**

---

---

ஆதாமுடன் தேவன் பேசினதுபோலவே, ஏவாளிடம் சர்ப்பம் பேசுவதைக் கவனியுங்கள். ஆதி 2:16,17. தேவனுடைய இடத்தை எடுத்துக்கொண்டு, அவரைவிட அதிகம் தெரிந்திருப்பதுபோலப் பேசுகிறது. முதலாவது, தேவன் சொன்னதை ஸ்திரீ சரியாகப் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம் என்பதுபோல சாத்தான் ஒரு கேள்வியைக் கேட்கிறான். பிறகு தேவனுடைய நோக்கங்கள் குறித்து வெளிப்படையாகவே கேள்வி எழுப்பி, எதிர்க்கருத்து கூறுகிறான்.

இரண்டு விஷயங்களைப்பற்றி எதிர்க்கருத்து சொன்னான். ஒன்று மரணம்; அடுத்தது, நன்மை தீமை பற்றி அறிவது. அந்தக் கனியைப் புசித்தால் அவர்கள் நிச்சயம் மரிப்பார்களென தேவன் சொன்னார். ஆதி 2:17. ஆனால் அவர்கள் மரிப்பதில்லை; மனிதர்கள் அழியாமை உள்ளவர்களென சாத்தான் சொன்னான். ஆதி 3:4. கனியைப் புசிக்கவேண்டாமென தேவன் சொன்னார். ஆதி 2:17. ஆனால் கனியைப் புசித்தால் அவர்கள் தேவனைப்போல மாறமுடியும் என்று சொல்லி, அதைப் புசிக்க சாத்தான் ஊக்குவிக்கிறான். ஆதி 3:5.

அழியாமை கிடைக்கும், தேவனைப்போலாகலாம் என்கிற சாத்தானுடைய இரண்டு வாதங்களை நம்பினதே, அந்தக் கனியை ஏவாள் புசிக்கத் தூண்டியது. தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அந்தப் பழத்தைப் புசிக்கத் தீர்மானித்ததுமே, தேவன் என்று ஒருவர் இல்லாததுபோலும், தானே தேவன்போலும் ஏவாள் நடந்துகொள்கிறாள். இந்த தன்னிலை மாற்றத்தையும் வேதாகமம் குறிப்பிடாமல் இல்லை. தேவனுடைய அதே வார்த்தைகள் ஏவாளுக்குள் எழும்புகின்றன. விலக்கப்பட்ட கனியைப் பார்த்து, 'புசிப்புக்கு நல்லது' என்று மதிப்பிட்டாள். ஆதி 3:6. இது தேவன் தம் சிருஷ்டிப்பை 'நல்லது' என்று மதிப்பிட்டதை ஞாபகப்படுத்துகிறது. உதாரணமாக, ஆதி 1:4.

அழியாமை வேண்டும், தேவனைப்போலாகவேண்டும் என்கிற இந்த இரண்டு தூண்டல்கள்தாம், பண்டைய எகிப்திய, கிரேக்க மார்க்கங்களின் அழியாமை கருத்துகளுக்கு அடிப்படையாகும். அழியாமையை ஒரு தெய்வீக பண்பாகக் கருதினார்கள்; அதனால் அதை அடைவதற்கு தெய்வீக நிலையை எட்டுவது தங்கள் கடமையென நம்பினார்கள். இந்த எண்ணம் யூத-கிறிஸ்தவ கலாச்சாரங்களிலும் ஊடுருவியது; ஆத்துமா அழிவில்லாதது என்கிற நம்பிக்கை பிறக்க வழிசெய்தது; அந்த நம்பிக்கை இன்று பல சபைகளில் காணப்படுகிறது.

---

**இயல்பாகவே நம் அனைவருக்குள்ளும் அழியாத்தன்மையுள்ள ஏதோ ஒன்று இருப்பதாகக் கற்பிக்கிற கோட்பாடுகள் என்ன? இந்த ஆபத்தான வஞ்சகங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு மனிதனின் நிலை, மரித்தோரின் நிலைகுறித்து புரிந்திருப்பது எவ்வாறு உதவும்?**

# தேவனுக்குமுன் ஒளிதல்

**ஆதாமும் ஏவாளும் ஏன் தேவனுக்குமுன் ஒளிந்துகொள்ள நினைத்தார்கள்? ஆதி 3:7-13. ஆதாமிடம் தேவன், 'நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டது ஏன்? ஆதாமும் ஏவாளும் எவ்வாறு தங்கள் தவற்றை நியாயப்படுத்த முயன்றார்கள்?**

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததும், தேவபிரசன்னத்தின் பிரதிபலிப்பான மகிமையின் வஸ்திரங்களை இழந்தார்கள்; அதனால் நிர்வாணிகளாக உணர்ந்தார்கள். சங் 8:5; ஒப்பிடவும் சங் 104:1,2. பாவம் தேவசாயலைச் சிதைத்தது. 'தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்'. ஆதி 3:7. இதில் 'உண்டுபண்ணு' என்பதற்கான எபிரெய வினைச்சொல், தேவன் எழுவாயாக வரும் இடத்தில் மட்டுமே வருகிறது. ஆதி 1:7,16,25. சிருஷ்டிகர் இல்லாமல் தங்கள் பாவத்தை மூட முடிவதுபோலச் செயல்பட்டார்கள். அதைத்தான் கிரியைகளினால் நீதிமான்களாக முயல்வது என்று பவுல் சொல்கிறான். கலா 2:16.

அப்போது தேவன் வந்து, 'நீ எங்கே இருக்கிறாய்?' என்று கேட்கிறார். ஆதி 3:9. அது ஓர் அறிவினா; அவனிடம் அவர் பதிலை எதிர்பார்க்கவில்லை. அதே போன்ற ஒரு கேள்வியை பின்னர் காயீனிடம் கேட்கவிருந்தார். ஆதி 4:9. தேவனுக்குப் பதில் தெரியும். குற்றம்செய்தவர்கள் தங்கள் குற்றத்தை உணரவும், அதே நேரம், அவர்களை மனந்திரும்புதலுக்கும் இரட்சிப்புக்கும் வழி நடத்தவும் அவ்வாறு கேட்டார். மனிதர்கள் பாவம்செய்த கணம்முதல், அவர்கள் இரட்சிப்புக்காகவும் மீட்பிற்காகவும் தேவன் செயல்பட்டுவருகிறார்.

இவை அனைத்தும் நியாயவிசாரணை காட்சியைத்தான் கண்முன் கொண்டுவருகின்றன. அதாவது, குற்றம்செய்தவனுக்கு நீதிபதி தண்டனை வழங்கவேண்டும். ஆதி 3:14-19. அதற்காக அவனை விசாரிக்கிறார். ஆதி 3:9. ஆனால் மனமாற்றத்தைத் தூண்டுவதற்காகவும் அதைச் செய்கிறார்; மனமாற்றம் இரட்சிப்புக்கு வழிநடத்தும். ஆதி 3:15. இந்தக் கருத்தை வேதாகமம் முழுவதிலும் காணலாம்.

எல்லா பாவிகளையும்போலத்தான் முதலில் ஆதாமும் ஏவாளும் நடந்தார்கள். அதாவது, குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கவும், ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டவும் முயல்கிறார்கள். ஆதாமிடம் தேவன் கேட்டதும், அவர் கொடுத்த ஸ்தீரி கொடுத்ததாகவும், அதனால்தான் பாவம் செய்ததாகவும் சொல்கிறான். ஆதி 3:12. அப்படியானால் அவளைக் கொடுத்த தேவனைக் குற்றஞ்சாட்டுகிறானே தவிர, தன் தவற்றை ஒத்துக்கொள்ளவில்லை.

தன்னை சர்ப்பம் வஞ்சித்ததாக ஏவாள் சொல்கிறாள். ஆதி 3:13 இல் வரும் 'வஞ்சித்தல்' என்பதற்கான எபிரெய வார்த்தை நாஷா. அதற்கு, பொய்யான நம்பிக்கைகளைக் கொடுப்பது, சரியானதைச் செய்வதுபோல நம்பவைப்பது என்று அர்த்தம். 2இராஜா 19:10; ஏசா 37:10; எரே 49:16.

ஸ்திரீதான் பழத்தைக் கொடுத்ததாக ஆதாம் குற்றஞ்சாட்டுகிறான். அது ஓரளவு உண்மைதான். சர்ப்பம் தன்னை வஞ்சித்ததாக ஏவாள் குற்றஞ்சாட்டுகிறாள். அதுவும் ஓரளவு உண்மைதான். ஆனால் இறுதியில், இருவருமே குற்றவாளிகள்.

**தாங்கள் செய்த தவற்றை மற்றவர்கள்மேல் பழிபோட முயன்றார்களா? இதே கண்ணியில் நாமும் விழுந்துவிடுவது ஏன் எளிதானது?**

# சர்ப்பத்தின் இறுதி முடிவு

*'உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்கு வேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்'. ஆதி 3:15.*

**கர்த்தர் சர்ப்பத்திடம் பேசின இந்த வார்த்தைகளில் அடங்கியுள்ள நம்பிக்கை என்ன?**

---

முதலாவது தேவன் சர்ப்பத்திற்கு நியாயத்தீர்ப்பு வழங்குகிறார். ஏனென்றால், அவன்தான் அந்த ஒட்டுமொத்த நிகழ்வுக்கும் காரணம். இந்தச் சம்பவத்தில் சர்ப்பத்தைமட்டும்தான் தேவன் சபித்தார்.

இங்கு சிருஷ்டிப்பு ஒருவகையில் 'தலைகீழாக' மாறுகிறது. சிருஷ்டிப்பு ஜீவனுக்கும் நன்மைக்கும் ஆசீர்வாதங்களுக்கும் வழிநடத்தியது; நியாயத்தீர்ப்பு மரணத்திற்கும் தீமைக்கும் சாபங்களுக்கும் வழிநடத்துகிறது; ஆனால் நம்பிக்கையையும் இரட்சிப்பின் வாக்குறுதியையும் கொடுக்கிறது. சர்ப்பம் மண்ணைத் தின்னும் என்று தீர்க்கதரிசனமாகச் சொன்னார்; அது மனுக்குலத்திற்கு இரட்சிப்பின் நம்பிக்கையைக் கொடுக்கிறது. ஆதி 3:14. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தண்டனை கொடுப்பதற்கு முன்னரே, மீட்பின் நம்பிக்கையை கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கிறார். ஆதி 3:15. ஆம், அவர் பாவம் செய்தார்கள்; பாவத்தின் விளைவுகளை அனுபவித்தாகவேண்டும்; ஆம், பாவத்தின்நிமித்தம் மரணத்தையும் சந்தித்தாகவேண்டும். இவை எல்லாவற்றிற்கும்மத்தியிலும் இரட்சிப்பின் நம்பிக்கையைக் கொடுக்கிறார்.

**ஆதி 3:15ஐ ரோமர் 16:20; எபி 2:14; வெளி 12:17 ஆகிய வசனங்களுடன் ஒப்பிடுங்கள். இரட்சிப்பின் திட்டம், மாபெரும் போராட்டம்பற்றி இந்த வசனங்கள் சொல்வது என்ன?**

---

ஆதி 3:15க்கும் வெளி 12:17க்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளைக் கவனியுங்கள். வலுசர்ப்பம்-சர்ப்பம்; கோபங்கொள்தல்-பகை; வித்து-சந்ததி; ஏதேனின் ஸ்தீரி-வெளி 12:17இன் ஸ்திரீ. விழுகையின்போது ஏதேனுக்குள் நுழைந்த மாபெரும் போராட்டம் முடிவு காலம்வரை தொடரும். ஆனாலும் சாத்தானின் தலை நசுக்கப்படுமென அவனுடைய தோல்விபற்றி ஏதேனில் ஏற்கனவே சொல்லிவிட்டார்; இந்தக் கருத்தை வெளிப்படுத்தல் திட்டமாகத் தெரிவிக்கிறது; அவனுடைய இறுதி அழிவைத் தெளிவுப்படுத்துகிறது. வெளி 20:10. தீமையை அறிந்ததால் உண்டான கடும் குழப்பத்திலிருந்து விடுபட ஒரு வழி இருக்கிறதென்கிற நம்பிக்கையை ஆரம்பத்திலேயே மனிதனுக்குக் கொடுத்தார்; அந்த நம்பிக்கை இன்று நமக்கும் உரியது.

---

**பூமியில் பாவமும் தீமையும் தோன்றின ஏதேனில்தானே தேவன் இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தார் என்பது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது?**

---

# மனிதனுக்குத் தீர்ப்பு

**விழுகையின் விளைவாக, ஆதாமும் ஏவாளும் என்ன நிலைக்கு ஆளானார்கள்? ஆதி 3:15-24.**

---

தேவன் சர்ப்பத்திற்குக் கொடுத்த நியாயத்தீர்ப்பு ஒரு சாபம் என்பதில் சந்தேகமில்லை. ஆதி 3:14. ஆனால் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுத்தது சாபமல்ல. அடுத்து, 'பூமியைக்' குறிப்பிடும்போதுதான் 'சாபம்' என்கிற வார்த்தை வருகிறது. ஆதி 3:17. அதாவது, சர்ப்பத்தைப்போல அல்ல, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் வேறு திட்டங்கள் வைத்திருந்தார். அவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கிறார்; சர்ப்பத்திற்குக் கொடுக்கவில்லை.

சர்ப்பத்தோடு கூட்டுச்சேர்ந்து ஸ்திரீ பாவம்செய்த காரணத்தால், ஸ்திரீக்குக் கொடுத்த நியாயத்தீர்ப்பானது சர்ப்பத்திற்குக் கொடுத்த நியாயத்தீர்ப்புடன் சம்பந்தப்பட்டதாகும். ஆதி 3:15ஐத் தொடர்ந்து ஆதி 3:16லிலும் ஸ்திரீயின் நியாயத்தீர்ப்பு வருகிறது; எனவே இரண்டு நியாயத்தீர்ப்புக்கும் ஒற்றுமைகள் உள்ளன; ஆதி 3:15இலுள்ள மேசியாகுறித்த தீர்க்கதரிசனத்தோடு சம்பந்தப்படுத்தியே ஆதி 3:16ஐ வாசிக்கவேண்டும். எனவே வேதனையோடு பிள்ளை பெறுவாளென ஸ்திரீக்கு தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பை, இரட்சிப்பின் கண்ணோட்டத்துடன் வாசிக்கவேண்டும். ஒப்பிடவும் 1தீமோ 2:14,15.

தேவனுக்குச் செவிகொடுக்காமல் ஸ்திரீக்குச் செவிகொடுத்து மனிதன் பாவம் செய்ததால், அவன் எடுக்கப்பட்ட பூமியைச் சபித்தார். ஆதி 3:17. அதனால் மனிதன் பாடுபட்டு உழைக்கவேண்டும். ஆதி 3:17-19. பிறகு தான் எடுக்கப்பட்ட அந்தப் பூமிக்கே 'திரும்பவேண்டும்'. ஆதி 3:19. அது நடந்திருக்கக்கூடாதது; தேவனுடைய ஆதி திட்டத்தில் இல்லாதது.

மரணம் நம்பிக்கையற்ற சூழலை உண்டாக்கியது; ஏவாள் பிள்ளை பெறுவாள் என்கிற வாக்குறுதியானது வாழ்வுகுறித்த நம்பிக்கையை ஆதாமுக்குக் கொடுத்தது. ஆதி 3:20. அதாவது, மரணத்தண்டனைக்குமத்தியிலும் வாழ்வுக்கான நம்பிக்கையைக் காண்கிறான்.

அன்புள்ள எந்தப் பெற்றோரும் செய்வதுபோல, தேவன் அவர்களது நன்மையை மட்டுமே விரும்பினார்; தீமைசெய்ய நினைக்கவில்லை. இப்போது தீமை இன்னதென அவர்கள் அறிந்துவிட்டதால், அதிலிருந்து அவர்களை இரட்சிக்க தம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய முற்பட்டார். நம் முதல் பெற்றோர் வேண்டுமென்றே, துணிகரமாகக் கீழ்ப்படியாமல் போனார்கள்; அதனால் தண்டனைக்கு ஆளானார்கள்; ஆனாலும் அவர்களை முற்றிலும் நம்பிக்கையில்லாமல் விடவில்லை. பரதீசில் வாழ்ந்தார்கள்; தேவனையும் அவர் வார்த்தைகளையும், அவர்கள்மேல் வைத்திருந்த அன்பையும் சந்தேகிப்பதற்கு ஒரு காரணங்கூட இருந்திருக்காது.

---

**'அறிவு' தன்னில்தானே நல்லதெனக் கருதுகிறோம்; ஆனால் எல்லா விஷயங்களுக்கும் அது பொருந்தாது. சில விஷயங்களை நாம் அறியாமலேயே இருப்பது ஏன் நல்லது?**

# மேலும் படிக்க:

'ஜீவவிருட்சத்திற்கும்', 'நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்திற்கும்' உள்ள தொடர்பு பற்றிச் சிந்தியுங்கள். இரண்டு விருட்சங்களும் 'தோட்டத்தின் நடுவிலே' இருந்தன என்பதை வேதாகமம் முன்னரே சொல்கிறது. ஆதி 2:9. அந்த நிலவியல் தொடர்பைக்காட்டிலும் அதிக தொடர்பு இருக்கிறது. மனிதர்கள் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறியதால், ஜீவவிருட்சத்திடம் செல்கிற பாக்கியத்தை இழந்தார்கள்; நித்தியமாக வாழமுடியாமல் போனது. இந்தத் தொடர்பு ஒரு முக்கிய நியதியை வலியுறுத்துகிறது. ஒருவர் செய்கிற ஒழுக்க, ஆவிக்குரிய தீர்மானங்கள் உயிரியல் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சாலொமோன் தன் மகனுக்குச் சொல்லும் புத்திமதி இது: "என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும், சமாதானத்தையும் பெருகப்பண்ணும்'. நீதி 3:1,2. இந்தத் தொடர்பை எதிர்கால பரலோக எருசலேமிலும் காணமுடிகிறது: அங்கே 'நகரத்து வீதியின் மத்தியில்' ஜீவவிருட்சம்மட்டுமே இருக்கும். வெளி 22:2.'

'மனிதனைவிட ஏவாள் மேலானவளாகவோ கீழானவளாகவோ அல்லாமல், எல்லாவற்றிலும் அவனுக்குச் சமமாக இருக்கும்படி, தேவன் திட்டமிட்டு அவளைச் சிருஷ்டித்தார். அந்தப் பரிசுத்த தம்பதியரில் எவரும் தற்சார்புடன் நடக்க அவர் விரும்பவே இல்லை; ஆனால் அவரவர் தனிப்பட்ட விதத்தில் சிந்தித்து, செயல்பட உரிமை கொடுத்தார். ஆனால் ஏவாள் பாவம் செய்தபிறகு, அவளே முதலில் மீறுதலுக்கு ஆளானதால், ஆதாம் அவளை ஆண்டுகொள்வான் என்று கர்த்தர் சொன்னார். அவள் கணவனுக்குக் கீழ்ப்படிந்து இருக்கவேண்டிய நிலை உண்டாயிற்று; அது சாபத்தின் ஒரு பகுதி. அந்தச் சாபம் பல வழிகளில் ஸ்திரீக்கு கொடும் துக்கத்தைக் கொண்டுவந்தது; அவள் வாழ்க்கையைப் பாரமாக்கியது. தேவன் மனிதனுக்குக் கொடுத்த மேலாண்மையை, தன்னிச்சை அதிகாரத்துடன் செயல்பட்டு பல விதங்களில் துஷ்பிரயோகம் செய்தான். எல்லையில்லா ஞானமுடையவர் மீட்பின் திட்டத்தை வகுத்தார்; மனிதனுக்கு இரண்டாம் தவணை கிடைத்தது, இன்னொரு வாய்ப்பைப் பெற்றான்.[1]

[1] Ellen G. White, Testimonies for the Church, vol. 3, p. 484.

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *ஏதேன் தோட்டத்தில் ஆதாமைச் சந்தித்த தேவன், அவனுடைய குற்றத்தை உறுதி செய்து, அவனை மனந்திரும்புதலுக்குள் வழிநடத்துவதற்காக கேள்விகள் கேட்டார். இதே கருத்தை காயீன், ஜலப்பிரளயம், பாபேல் கோபுரம், சோதோம் கொமோரா ஆகிய சம்பவங்களிலும் காணலாம். ஆதி 4:9,10; ஆதி 6:5–8; ஆதி 11:5; ஆதி 18:21. இந்தச் சம்பவங்களில் நியாயவிசாரணைக் கருத்து எவ்வாறு வெளிப்படுகிறது?*

2. *நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிப்பது ஞானத்தைக் கொடுக்குமென ஏவாள் யோசித்தது ஏன்? அதே தவற்றை நாம் எவ்வாறு தவிர்க்கலாம்? அதாவது தேவன் அருளியிருப்பதை விட 'சிறப்பான' ஒன்று இருக்கிறதென நம்பி, தேவ வார்த்தைக்கு எதிராக நடப்பதை எவ்வாறு தவிர்க்கலாம்?*

# சிறைச்சாலையில் மன்னிப்பு: பகுதி 1

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

ஸ்பெய்னில் உள்ள ஒரு சிறைச்சாலையின் கைதிகளில், தங்களுக்கு வேதபாடம் நடத்த வேண்டுமென பெயர் கொடுத்தவர்கள் ஒவ்வொருவரையும் தன்னார்வலர்கள் தேர்வுசெய்து கொண்டிருந்தார்கள். ஆனால் ஒருவரைமட்டும் யாரும் தேர்வுசெய்யவில்லை. “இவரை யாரும் தேர்வுசெய்யவில்லையா?” என்று கேட்டார் 36 வயது வேதாகம மாணவரான டேன்டே மார்வின் ஹெர்மேன்; சகுண்டா அட்வென்டிஸ்ட் கல்லூரியில் இது நடந்தது.

“அவருக்கு வேதபாடம் நடத்துவது எளிதல்ல” என்று ஒரு தன்னார்வலர் சொன்னார்.

“அவர் எப்போதுமே தேவனைப் பரிகாசம்பண்ணுவார்” என்றார் இன்னொருவர்.

டேன்டே ஜெபித்தார்; ‘மடியாஸை நீ சந்திக்கவேண்டும்’ என்று தேவன் மெல்லியக் குரலில் பேசினார்.

சிறையில், நன்றாக முகச்சவரம் செய்திருந்த மடியாஸ் என்ற வாலிபரை சிறைக்காவலர் டேன்டேவிடம் அழைத்துவந்தார். அதிகப்பட்ச காவல் நிறைந்த ஓர் இடத்தில் அந்தச் சந்திப்பு நடந்தது. கொலை, கொள்ளை குற்றவாளிகளைப்போல மடியாஸ் கடின முகத்தோடு இருக்கவில்லை; உடலில் பச்சை குத்திருக்கவும் இல்லை; கோபமுகமும் இல்லை.

“நீங்கள் மற்ற சிறைக்கைதிகள்போல இல்லையே” என்று டேன்டே கேட்டார்.

மடியாஸ் சிரித்தார். “நான் யாரென உங்களுக்குத் தெரியாது” என்று மடியாஸ் சொன்னார். “அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எல்லாருமே வாழ்க்கையில் ஏதாவது தவறுகள் செய்கிறோம். கடந்தகாலத்தை நம்மால் மாற்றமுடியாது” என்று டேன்டே சொன்னார்.

மடியாஸ் டேன்டேயை உற்றுப்பார்த்தார். கைகளில் பச்சைகுத்தியிருந்தார்; காதுகளில் ஓட்டைப் போட்டிருந்தார்.

“நீங்கள் செவந்த்–டே அட்வென்டிஸ்டா? நீங்கள் மற்ற அட்வென்டிஸ்டுகள்போல இல்லையே?” என்று மடியாஸ் கேட்டார்.

“யாரை வேண்டுமானாலும் தேவனால் மாற்றமுடியும்” என்று டேன்டே சொன்னார். 17 வயதில் தான் ஆவிமார்க்கத்தில் ஈடுபட்டதையும், ஒரு தெருக்கும்பலில் சேர்ந்ததையும், போதைமருந்து விற்றதையும், பிறகு தேவ அன்பை அறிந்து, அட்வென்டிஸ்டாக மாறியதையும் கூறினார். அவர்கள் பேசி முடிக்கவும், அன்றைக்கான சந்திப்பு நேரம் முடிந்தது.

“மீண்டும் என்னைச் சந்திக்க வருவீர்களா? இந்த அன்பான தேவனைப்பற்றி நான் அதிகமாக அறிந்துகொள்ளவேண்டும். தேவனை கோபக்காரராக, குற்றவாளியாகத் தீர்ப்பவராகத்தான் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்” என்று கேட்டார்.



அடுத்த ஓய்வுநாளில் தான் நிச்சயம் வருவதாக டேன்டே சொன்னார். ஆனால் மடியாஸ் ஒரு கொடிய குற்றவாளியென கல்லூரியில் எல்லாரும் டேன்டேவிடம் சொன்னார்கள். உடனே, அவரிடம் தேவன் தன்னை அனுப்பியதை எண்ணி டேன்டே கலங்கினார். ஆனால் தேவன், ‘டேன்டே, நான் உன்மேல் கிருபை காட்டினேன். உன்னை மன்னித்திருக்கிறேன். அவனையும் என்னால் மன்னிக்கமுடியும்” என்று மெல்லிய குரலில் தேவன் பேசினார்.